

திண்டுக்கல் மாவட்டம், வடுகம்பாடி ஊராட்சியில், கலைஞரின் கனவு இல்லம் திட்டப் பயனாளிகளுக்கு பணி ஆணைகளை அமைச்சர் சக்கரபாணி நேற்று முன்தினம் (10.08.2024) வழங்கினார். அருகில் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திலகவதி, பழனி வருவாய் கோட்டாட்சியர் சரவணன், குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் சீனிவாசன், ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் மணிமேகலை, ஊராட்சி மன்ற தலைவர் சேகர் உட்பட பலர் உள்ளனர்.







வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (11.08.2024) ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை, பல்நோக்கு உயர் சிறப்பு சிகிச்சை பிரிவில் நவீன வசதிகளுடன் சிகிச்சை பெற கட்டணப் படுக்கைகள் கொண்ட அறையினை திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி.சு.நாகரத்தினம், துணை மேயர் வே.செல்வராஜ் உட்பட பலர் உள்ளனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி இணைந்து நடத்தும்

# கலைஞர் நூற்றாண்டு விழா வினாடி - வினா போட்டி! கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு!

## மாவட்டம் முழுவதிலும் இருந்து மகளிர் அணியினர் திரண்டு வரும்படி உதயா சசிகலா வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஆக. 12 - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி இணைந்து வருகிற 14 ஆம் தேதி பரணிபுத்தூரில் நடத்த உள்ள கலைஞர் நூற்றாண்டு விழா வினாடி வினா போட்டியில் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி, எம்.பி., பங்கேற்று சிறப்பிக்க உள்ளார். காஞ்சிபுரம் மண்டல அளவில் நடைபெறும் இந்த வினாடி வினா போட்டியை காண மாவட்டம் முழுவதிலும் இருந்து கழக மகளிர் அணியினர் மகளிர் தொண்டு அணியினர் மற்றும் உள்ளாட்சி பெண் பிரதிநிதிகள் அனைவரும் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்கும்படி மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் உதயா கருணாகரன் மற்றும் மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் எஸ்.சசிகலா ஆகியோர் இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கை :

கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் வகையில், திராவிட இயக்க வரலாற்றையும் கொள்கைகளையும் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் வகையில், தி.மு. கழக துணைப் பொதுச்செயலாளர் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி, எம்.பி., அவர்களின் முன்னெடுப்பில், கழக மகளிர் அணி சார்பில் கலைஞர் 100 வினாடி வினா போட்டி கடந்த ஆண்டு செப்டம்பர் 16ஆம் தேதி தொடங்கி இணைய வழியில் முதல் சுற்றுப் போட்டி நடந்து முடிந்தது.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய திராவிட இயக்க முப்பெரும் தலைவர்கள் முன்னின்று வழி நடத்திய அறிவுப் புரட்சியின் சிறப்பான வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு முன்னெடுத்துச் செல்வதே இந்த "வினாடி வினா" போட்டியின் முதன்மை நோக்கமாகும்.

இந்த வினாடி வினா போட்டி மகளிருக்காக, 18 வயதுக்குட்பட்ட பிரிவு 18 வயதிற்கும் மேற்பட்ட பிரிவு என்ற 2 பிரிவுகளில் முதல் சுற்று நடத்தப்பட்டது.

இந்த இணைய வழி வினாடி வினா போட்டியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக மதிப்பெண்களை பெற்றுள்ள குழுக்கள் மண்டல அளவிலான "வினாடி வினா" போட்டிக்கு முன்னேறி உள்ளனர்.

அந்த வகையில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய 3 வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கிய காஞ்சிபுரம் மண்டல அளவிலான "கலைஞர் 100 வினாடி வினா" போட்டி வருகிற ஆகஸ்ட் 14ஆம் தேதி பிற்பகல் 3.00 மணி அளவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், மௌலிவாக்கம் அருகில் உள்ள பரணிபுத்தூர், சக்தி பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், குறு சிறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் தலைமையில் இந்த வினாடி வினா நிகழ்ச்சி நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர், காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் உதயா கருணாகரன் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

மாவட்ட மகளிர் அணி தலைவர் கே.சி.சந்தியா, மாவட்ட துணைத் தலைவர் மலர்விழி தமிழ் அமுதன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் மீரா சபாபதி, சி.எம்.கலை வாணி, பி.விஜயலட்சுமி, பி.வளர்மதி, வெ.பாண்டிச்செல்வி, வி.சரளா, எஸ்.தமிழரசி, எஸ்.சத்தியா மற்றும் மாவட்ட மகளிர் தொண்டர் அணி தலைவர் லட்சுமி ஞானசேகர், மாவட்ட துணைத் தலைவர் கே. சாந்தி, மாவட்ட துணை அமைப்பாளர் எம்.கலாவதி, கல்யாணி மணிராஜன், ஆர்.விஜயலட்சுமி ரமேஷ், ஜி.வெற்றிச்செல்வி, த.செண்பகவல்லி, எஸ்.சந்தியா, எஸ்.நளினிப்பிரியா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., இந்த வினாடி வினா நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், எம்.பி., கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், கழக மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ராணி, கழக மகளிர் அணி இணைச் செயலாளர், காஞ்சி மண்டல மகளிர் அணி பொறுப்பாளர் குமரி விஜயகுமார், கழக மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர், திருவள்ளூர் மாவட்ட மகளிர் அணி பொறுப்பாளர் சேலம் சுஜாதா, கழக சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர். ராஜா, எம்.எல்.ஏ., இ. கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., மாவட்ட மகளிர் தலைவர் த.துரைசாமி, மாவட்ட துணை செயலாளர் து.மூர்த்தி, மாவட்ட பொருளாளர் வெ.விசுவநாதன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கீதா ஆனந்தன், செ.அருள்தேவி,

செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், மாவட்ட ஊராட்சிக் குழு துணைத் தலைவர் காயத்திரி அன்புச்செழியன், நகர மன்றத் தலைவர் தேன்மொழி நரேந்திரன், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் சரஸ்வதி மனோகரன், சங்கீதா பாரதி ராஜன், பேரூராட்சி தலைவர் சாந்தி சதீஷ்குமார், ஊராட்சி ஒன்றியக்குழு துணைத் தலைவர்கள் சத்யா சேகர், உமாமகேஸ்வரி வந்தேமாதரம், மாலதி போஸ்கோ, நகர மன்ற துணைத் தலைவர் சித்ரா கமலக்கண்ணன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இந்திராணி சுப்பிரமணியயன், கழக அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் டாக்டர். ஆர்.எஸ்.கிருத்திகாதேவி, டாக்டர்.பவித்ரா, டாக்டர். ஓவியா முருகன், டாக்டர். மஞ்சு சுபாஷினி, பர்வின் நிஷா, வே.சங்கீதா, ம. ரேவதி, க.சுகுணா மற்றும் மாநகர பகுதி ஒன்றிய நகர - பேரூர் மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி, துணை அமைப்பாளர்கள், மாநகராட்சி, நகராட்சி பேரூர் வார்டு பெண் கவுன்சிலர்கள், மாவட்ட ஊராட்சி ஒன்றியக்குழு ஊராட்சி வார்டு பெண் கவுன்சிலர்கள், பெண் ஊராட்சி மன்ற தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து மகளீர்களும் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

முடிவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் எஸ்.சசிகலா நன்றி கூறுகிறார்.

கழக துணைப் பொதுச் செயலாளர் அக்கா கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் பங்கேற்று சிறப்பிக்கும் இந்த "வினாடி வினா" நிகழ்ச்சிக்கு, காஞ்சி வடக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர்களில் இருந்து கழக மகளிர் அணியினரும், மகளிர் தொண்டர் அணியினரும் மகளிர் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் ஆயிரக்கணக்கில் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்கும் படி அழைக்கிறோம்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒட்டு மொத்த கழக மகளிர் அணியினரும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பது "நமது கடமை" "நமது உரிமை" என்ற அந்த உணர்வோடு வருகிற 14 ஆம் தேதி பிற்பகல் 3.00 மணிக்கெல்லாம் பரணிபுத்தூருக்கு திரண்டு வந்து பங்கேற்று நமது மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கி றோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கூறி உள்ளனர்.



தாம்பரம் கிழக்கு பகுதி கழக சார்பில் இன்று மாலை இல்லம் தேடி இளைஞர் அணி சேர்த்தல் அவசர செயற்குழு கூட்டம் வார்டு எண் 66 கேம்ப் ரோட்டில் நடைபெற்றது. பகுதி கழக செயலாளர் மாடம்பாக்கம் நடராஜன் மற்றும் காஞ்சி வடக்கு மாவட்ட கழக இளைஞரணி துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன் தாம்பரம் மாநகர துணை செயலாளர் பொன்.சதாசிவம், தாம்பரம் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் கார்த்தி 66–வது வட்டக் கழக செயலாளர் சாந்தகுமார் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

சென்னை புறநகர் ரயில்களில் ஏ.சி. கோச்;

# பெரம்பூரில் நான்காவது ரயில் முனையம்!

## டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்விக்கு ரயில்வே அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஆக. 12- சென்னையில் ரயில் சேவையை மேம்படுத்த ரயில்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் சென்னையில் நான்காவது ரயில் முனையம் அமைக்கவும் திட்டமிருக்கிறதா? என மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி. டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அளித்த பதில்:

இந்திய ரயில்வே துறையைப் பொறுத்தவரை சென்னை மிக முக்கியமான ஒரு மாநகரம். புதிய ரயில் பாதைகள் அமைப்பது, இரட்டை ரயில் பாதைகள் அமைப்பது, ரயில் நிலையங்களின் தரத்தை உயர்த்துவது, ரயில்வே மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப் பாதைகள் அமைப்பது, புதிய ரயில் பெட்டிகள் அறிமுகம் மற்றும் புதிய ரயில்கள் அறிமுகம் என சென்னையை மையமாக வைத்து தொடர்ச்சியாக பல திட்டங்களை ரயில்வே துறை செயல்படுத்தி வருகிறது.

சென்னையில் சென்டிரல், எழும்பூர், தாம்பரம் ஆகிய மூன்று ரயில் முனையங்கள் செயல்பட்டு வருகின்றன. பயணிகள் எண்ணிக்கை மற்றும் ரயில்களின் எண்ணிக்கையை மனதில்கொண்டு நான்காவதாக பெரம்பூரில் புதிதாக ஒரு ரயில் முனையம் அமைப்பதற்கான சாத்



தியக் கூறு ஆய்வு நடந்து வருகிறது.

ஏப்ரல் 2024 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாட்டிலும், தமிழ்நாடு வழியாகவும் 33,467 கோடி ரூபாய் செலவில் 2,587 கிலோ மீட்டர் தூரத்துக்கு ரயில்வே திட்டப் பணிகள் நடந்து வருகின்றன. இவற்றில் பத்து புதிய ரயில் பாதைகள், மீட்டர் ரயில் பாதையை அகல ரயில் பாதையாக மாற்றும் மூன்று திட்டங்கள், ஒன்பது இடங்களில் இரட்டை ரயில் பாதைகள் அமைக்கும் திட்டங்கள் ஆகியவையும் அடங்கும். மொத்தம் திட்டமிடப்பட்ட 2,587 கி.மீ. திட்டத்தில் இதுவரை 7,153 கோடி ரூபாய் செலவில் 665 கி.மீ. நீளத்துக்கான பணிகள் முழுமை யடைந்துள்ளன.

2009-14 ல் தமிழ்நாட்டுக்கு 879 கோடி ரூபாயாக இருந்த நிதி ஒதுக்கீடு, 2024 - 25ல் 6362 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. பல மடங்கு நிதி ஒதுக்கீடு அதிகமாகியும் பல ரயில்வே திட்டங்கள் தாமதமாவதற்கு நிலங்களை கையகப்படுத்துவதில் ஏற்படும் நடைமுறை மற்றும் சட்ட சிக்கல்கள்தான் காரணம்.

தமிழ்நாட்டில் பல முக்கியமான திட்டங்களுக்கு 27,749 ஹெக்டேர் நிலம் தேவைப்படுகிறது. ஆனால் இதுவரை 807 ஹெக்டேர் நிலம் மட்டுமே கையகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பணியை விரைந்து முடிக்க தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

அம்ரித் பாரத் ரயில் நிலையங்கள் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் சென்னை சென்டிரல், எழும்பூர், தாம்பரம் உட்பட 77 ரயில் நிலையங்க ளின் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதன்படி இந்த ரயில் நிலையங்களில் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும். காத்திருப்பு அறைகள், தொழில் சார்ந்த கூட்ட அரங்குகள், இலவச வைஃபை வசதி, சில்லறை விற்பனைக் கடைகள், ரயில் நிலையங்களின் மேற்பகுதியில் வணிக வளாகங்கள் ஆகியவை உள்ளூர் மக்களின் ரசனை மற்றும் பண்பாடு சார்ந்து அமைக்கப்படும்.

சாலைகளில் பயணிக்கும் பயணிகள் பாதுகாப்பு மற்றும் எளிதான ரயில் பயணத்தை உறுதி செய்யும் வகையில் கடந்த பத்தாண்டுகளில் 687 ரயில்வே லெவல் கிராசிங்குகளில் ரயில்வே மேம்பாலம் மற்றும் சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை உள்ளிட்ட தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் மேலும் 239 இடங்களில் ரயில்வே மேம்பாலம் மற்றும் சுரங்கப்பாதைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

புதிய ரயில்களை அறிமுகம் செய்வது என்பது ஒரு தொடர்ச்சியான பணி. பயணிகளின் எண்ணிக்கை, ரயில் நிலையங்களில் ரயில்கள் மற்றும் பயணிகளை கையாளும் இட வசதி ஆகியவற்றைப் பொறுத்து புதிய ரயில்கள் அறிமுகம் செய்யப்படுகின்றன.

தற்போது சென்னை சென்டிரல் ரயில் நிலை யத்தில் உள்ள 12 நடைமேடைகள் மூலம் தினசரி 158 ரயில்களும், எழும்புரில் 11 நடைமேஎடைகள் மூலம் 108 ரயில்களும், தாம்பரத்தில் 9 நடைமேடைகள் மூலம் 93 ரயில்களும் இயக்கப்படுகின்றன.

இவ்வாறு அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பதிலளித்தார்.

டாக்டர் கனிமொழியின் மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், 'ஆண்டுக்கு 56,716 ரயில் பெட்டிகள் தயாராகிறது. இவற்றில் 19,391 பெட்டிகள் குளிர்சாதன வசதி கொண்டவை. மும்பையைத் தொடர்ந்து சென்னை புறநகர் ரயில்களிலும் குளிர்சாதன வசதி கொண்ட ரயில் பெட்டிகள் படிப்படியாக அறிமுகம் செய்யப்படும்' என்று தெரிவித்தார்.

# துங்கபத்ரா அணை மதகில் உடைப்பு!

பெங்களூர், ஆக.12- விஜயநகரா மாவட்டத்தில் ஹோசபேட் அருகே அமைந்துள்ள அணையின் 19ஆம் எண் கதவு உடைந்துள்ளது. அதன் வழியே அணையிலிருந்து தண்ணீர் வெளியேறி வருகிறது. சனிக்கிழமை இரவு 11 மணியளவில் 19வது கதவின் சங்கிலி இணைப்பு உடைந்துள்ளது.

இதைத் தொடர்ந்து, அணையிலிருந்து விநாடிக்கு 1 லட்சம் கன அடி வீதம் தண்ணீர் வெளியேறுவதால் ஆற்றங்கரையோரம் உள்ள பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டு ள்ளது. ஆற்றில் நீர் வரத்து எப்போது வேண்டுமானாலும் விநாடிக்கு 3 லட்சம் கன அடியை எட்டும் என்று அஞ்சப்படுகிறது. இதன் காரணமாக, கரையோர மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, கோப்பல், விஜயநகரா, பெல்லாரி, ராய்ச்சூர் மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. அணையின் பாதுகாப்பு கருதி அணையின் 33 மதகுகளும் திறக்கப்பட்டு அவற்றின் வழியாக தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. உடைந்துள்ள கதவினை சரிசெய்யும் பணிகளில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாகவும், அதிகளவு தண்ணீர் வெளியேறுவதால் பணியில் சுணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பூவிருந்தவல்லி ஒன்றியத்தில் வளர்ச்சிப் பணிகள்!

## ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

திருவள்ளூர், ஆக.12- தொகுதிகளில் நடைபெறும் வளர்ச்சி பணிகள் குறித்து எம்.எல்.ஏ.க்கள் ஆய்வு செய்ய வேண்டும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தி இருந்தார். அதன் தொடர்ச்சியாக பூவிருந்தவல்லி ஒன்றியத்துக்கு உட்பட்ட 28 ஊராட்சிகளில் நடைபெற்று வரும் திட்டங்கள், வளர்ச்சி பணிகள், நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் பூவிருந்தவல்லி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு பூவிருந்தவல்லி ஒன்றியக் குழுத் தலைவர் எம்.ஜெயக்குமார், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் டி. தேசிங்கு, பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், துணை தலைவர் பரமேஸ்வரி கந்தன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் 28 ஊராட்சிகளைச் சேர்ந்த ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள், ஊராட்சி செயலர்கள் கலந்துகொண்டனர். இதில் கலந்து கொண்ட ஊராட்சி மன்ற தலைவர்கள், தங்களது ஊராட்சிகளில் சமுதாய நலக்கூடம், சாலை வசதி, மழை நீர் கால்வாய் வசதி உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகளைச் செய்து தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

இதையடுத்து நசரத்பேட்டை, வரதராஜபுரம், பாரிவாக்கம், செம்பரம்பாக்கம் ஆகிய ஊராட்சிகளில் மழைநீர் கால்வாய் மற்றும் சாலை வசதி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அகரமேல் ஊராட்சியில் உள்ள கோவில் குளம் தூர் வாரப்படும், காட்டுப்பக்கம் ஊராட்சியில் ரூ.5 கோடி மதிப்பில் திருமண மண்டபம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். செம்பரம்பாக்கம் ஊராட்சியில் சமுதாயக்கூடம், சுடுகாட்டு பாதை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பல்வேறு ஊராட்சிகளில் செயல்படுத்த வேண்டிய கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

ஊராட்சி மன்ற தலைவர்கள் தங்கள் ஊராட்சிகளில் நடத்தப்பட்ட வேண்டிய வளர்ச்சி பணிகள் குறித்து மனுக்கள் வழங்கினார்கள்.



இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கும் முகாம் சார்பில் நேற்று குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்தில் வீடு வீடாக சென்று ஒன்றிய செயலாளர் வந்தே மாதரம் தலைமையில் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது. இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் கலந்து கொண்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜனார்த்தனன் மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.